بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

28 துல்கஃதா 1440 ஹிஜ்ரி கமரி 01 ஸஹூர் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

01 ஆகஸ்ட் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ تَفَرَّقُوْا وَاخْتَلَفُوْا مِنْۢ بَعْدِ مَا جَآءَهُمُ الْبَيِّنٰتُ ؕ وَاُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ عَظِيْمٌ ۝

தங்களிடம் மிகத்தெளிவான அடையாளங்கள் வந்த பின்னர் பிரிந்து விடவும், (தங்களுக்குள்) கருத்து வேறுபாடு கொள்ளவும் செய்தவர்களைப் போன்று நீங்கள் ஆகி விடாதீர்கள். அத்தகையவர்களுக்கே (அந்நாளில்) பெரும் ஆக்கினை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:106)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நீங்கள் உங்களது குழந்தைகளை கிறித்தவர்கள், ஆரியர்கள் போன்றோர்களின் அருகாமையிலிருந்து காப்பாற்றவில்லை என்றால் அல்லது காப்பாற்ற விரும்பவில்லை என்றால் பிறகு நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மீது மட்டுமல்ல; மாறாக சமுதாயத்தின் மீதும், இஸ்லாத்தின் மீதும் அநீதி இழைக்கின்றீர்கள். மிகப்பெரும் அநீதியை இழைக்கின்றீர்கள். இதன் பொருள் என்னவென்றால், உங்களுக்கு இஸ்லாத்தின் மீது எந்த ரோஷமும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியமும் உங்களுடைய உள்ளத்தில் இல்லை என்பதே அதன் பொருளாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### மார்க்கக் கல்வி மற்றும் தர்பிய்யத்தைப் பெறுவதற்கான சரியான நேரம்

இந்த விஷயத்தையும் சிந்திக்க வேண்டியது மிக முக்கியமாகும். அதாவது மார்க்கக் கல்வியைப் பெறுவதற்கு குழந்தைப் பருவமே மகவும் சரியான மற்றும் தகுந்த நேரமாகும். தாடி முளைத்து விட்டால் பிறகு ضَرَبَ يَضْرِبُ என்பதை மனனம் செய்வதில்லேயே அமர்ந்து விட்டால் பிறகு என்னதான் செய்ய முடியும்? குழந்தைப் பருவத்தில் நினைவாற்றல் மிகவும் செயல் துடிப்புடன் இருக்கும். மனித வாழ்வில் இத்தகைய நினைவாற்றல் வேறு எந்தவொரு நேரத்திலும் இருப்பதில்லை. எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அதாவது குழந்தைப் பருவத்தின் சில விஷயங்கள் இப்போதும் எனக்கு நினைவில் இருக்கிறது. ஆனால் 15 வருடத்திற்கு முன்பு நடந்த விஷயங்கள் நினைவில் இல்லை.

அதன் காரணம் என்னவென்றால், ஆரம்ப வயதில் அறிவின் பிம்பமானது எத்தகைய இடத்தைப் பெற்று விடுகிறது என்றால், மேலும் (அவனின்) வயது வளர்ச்சி மற்றும் ஆற்றல் வளரக்கூடிய பருவமாக இருப்பதால் அது உள்ளத்தில் எந்த அளவுக்கு அமர்ந்து விடுகின்றதென்றால் பிறகு அது ஒருபோதும் அழிவதில்லை.

சுருக்கமாக, கல்வி வழிமுறைகளில் மார்க்கக் கல்வியை ஆரம்பத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்ற இந்த விஷயங்களைக் குறிப்பான முறையில் கருத்தில் கொள்ள வேண்டும். ஆரம்பத்திலிருந்தே விருப்பம் இதுவாகவே இருந்தது. மேலும் இப்போதும் இருக்கிறது. அல்லாஹ் அதனை முழுமை செய்வானாக.

பாருங்கள். உங்களுக்கு அருகில் இருக்கின்ற சமுதாயங்கள் அதாவது ஆரியர்கள் எந்த அளவுக்கு அவர்கள் கல்விக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை ஒன்று சேர்த்து விட்டனர். மேலும் பல்கலைக்கழகத்தின் மிகவும் பெரிய கட்டிடங்கள் மற்றும் பொருட்களை அதற்காக ஆயத்தம் செய்துள்ளார்கள். முஸ்லிம்கள் முழுமையான முறையில் தமது குழந்தைகளின் கல்வியின் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் பிறகு ஒரு நேரத்தில் அவர்களின் கைகளிலிருந்து அவர்களது குழந்தைகள் சென்று விடுவார்கள் என்ற எனது கூற்றை செவிமடுத்துக் கொள்ளுங்கள்.

### அருகாமையின் தாக்கம்

இது எத்தகையதொரு நிரூபணமான விவகாரம் என்றால் இதனை விவாதிப்பதற்கு அவசியமே இல்லை. ஒவ்வொரு சமுதாயத்தின் நல்ல நேர்மையான குழந்தைகள் கிறித்தவர்களின் வலையில் சிக்கிக் கொள்வதையும், முஸ்லிம்களில் கவ்ஸ் மற்றும் குதுப் என்று அழைக்கப்படுகின்றவர்களின் குழந்தைகள் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை அவமதிக்கின்ற செயல்களை செய்வதையும் பார்த்து விட்டீர்கள்....

நீங்கள் உங்களது குழந்தைகளைக் கிறித்தவர்கள், ஆரியர்கள் போன்றோர்களின் அருகாமையிலிருந்து காப்பாற்றவில்லை என்றால் அல்லது காப்பாற்ற விரும்பவில்லை என்றால் பிறகு நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மீது மட்டுமல்ல; மாறாக சமுதாயத்தின் மீதும், இஸ்லாத்தின் மீதும் அநீதி இழைக்கின்றீர்கள். மிகப்பெரும் அநீதியை இழைக்கின்றீர்கள். இதன் பொருள் என்னவென்றால், உங்களுக்கு இஸ்லாத்தின் மீது எந்த ரோஷமும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது உங்களுடைய உள்ளத்தில் எந்த கண்ணியமும் இல்லை என்பதேயாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 61 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**என்னை விலங்குகள் இழுத்துக் கொண்டு சென்றாலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பிற்கேற்ப அந்த படையை அனுப்பியே தீருவேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்த முடிவை நிறைவேற்றியே தீருவேன்**

**இறைவன் மீது ஆணையாக! அவர் தன்னகத்தே தலைமைத்துவ பண்புகளைக் கொண்டிருக்கிறார். அதாவது ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களும், அவருக்குப் பிறகு ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களும் தம்முள் தலைமைத்துவ சிறப்புகளை கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் எனக்கு மிகவும் நேசத்திற்குரிய மக்களை சார்ந்தவர்கள் ஆவர். நிச்சயமாக இவர்கள் இருவரும் அனைத்து நன்மைகளுக்கும் உரிமை படைத்தவர்கள் ஆவர்**

**ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) ஆகியோரைப் பற்றி நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 28 ஜுன் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஹா (ரலி) அவர்களைப் பற்றி மேலும் சில சம்பவங்களும் ஆதாரங்களும் உள்ளன. அதனை இன்று நான் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ரபியுல் ஆகிர் மாதம் பனு சலீம் கோத்திரத்திற்கு எதிராக ஒரு போருக்கு அனுப்பப்பட்டார்கள். அது தொடர்பாக குறிப்பிட்டவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

அதாவது ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ரபீவுல் ஆகிர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மால் விடுவிக்கப்பட்ட அடிமையும் மற்றும் முன்னாள் வளர்ப்பு மகனுமாகிய ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் சில முஸ்லிம்களை பனு சலீம் கோத்திரத்தின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். இந்த கோத்திரம் அப்போது நஜது பகுதியில் ஜமூது என்ற ஊரில் வசித்து வந்தது. ஒரு நீண்ட காலமாக இந்த கோத்திரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தது. போர் செய்வதற்கு சூழ்ச்சிகளையும், முயற்சிகளையும் செய்து வந்தது.

எனவே அகழ் போரிலும் இக்கோத்திரம் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவதில் முக்கிய பங்கு வகித்தது. ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களும், அவர்களுடைய தோழர்களும் ஜமூம் என்ற இடத்தை அடைந்தார்கள். அது மதீனாவிலிருந்து 50 மைல் தொலைவில் இருந்தது. அப்போது அங்கு யாரும் இல்லை. வெறும் மைதானமாக இருந்தது. ஆயினும் மஸீனா கோத்திரத்தின் ஹலீமா என்ற பெண்மணி இஸ்லாத்தின் எதிரிகளைச் சார்ந்தவராக இருந்தார். அவர் அப்போது பனு சலீம் கோத்திரத்தின் ஒரு பகுதியினர் தமது கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருக்கின்ற இடத்தைப் பற்றிய தகவலை அவர்களுக்கு கொடுத்தார்.

ஆக, அந்த தகவல்களிலிருந்து பயன் பெற்றவாறு ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அந்த இடத்தை சோதனை செய்தார்கள். இந்த திடீர் தாக்குதலுக்கு அஞ்சி பெரும்பாலான மக்கள் இங்கும் அங்கும் ஓடி சிதறுண்டார்கள். அவர்கள் ஓடினாலும் சிலர் கைதிகளாகவும் ஆக்கப்பட்டார்கள். அவர்களின் கால்நடைகள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. அதனை எடுத்துக் கொண்டு அவர்கள் மதீனாவிற்குத் திரும்பினர். அக்கைதிகளில் ஹலீமாவின் கணவரும் தற்செயலாக மற்ற கைதிகளுடன் பிடிபட்டிருந்தார். அவர் ஒரு வகையில் போர்க் கைதியாக இருந்த போதிலும் ஹலீமா என்ற அந்த பெண்ணின் செய்த உதவியின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹலீமா என்ற பெண்ணை மட்டும் விடிவிக்கவில்லை. மாறாக, அவருடைய கணவரையும் எவ்வித ஈட்டுத் தொகையும் பெறாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடுதலை செய்தார்கள். ஹலீமாவும் அவரது கணவரும் மிக மகிழ்ச்சியுடன் தமது நாட்டிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 669)

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடைய மற்றுமொரு போர் உள்ளது. அது ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ஜமாதிவுல் ஊலா மாதத்தில் அய்ஸ் என்ற இடத்தை நோக்கி அன்னார் அனுப்பப்பட்டார்கள். அதைப் பற்றி குறிப்பிட்டவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் பனு சலீம் கோத்திரத்திற்கெதிரான போரில் பங்கு பெற்று திரும்பி வந்திருந்தார்கள். அதிக நாட்கள் கடந்திருக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜமாதிவுல் ஊலா மாதத்தில் 170 சஹாபிகளைக் கொண்ட படைக்கு தளபதியாக்கி மதீனாவிலிருந்து அனுப்பி வைத்தார்கள்.

இந்த திட்டத்திற்குரிய காரணம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது சிரியாவை நோக்கி மக்கத்து குரைஷிகளின் பயணக் குழு ஒன்று வந்து கொண்டிருந்தது. அக்குழுவை தடுத்து நிறுத்துவதற்காக இந்த படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இங்கு இதனையும் நான் தெளிவுபடுத்திக் கொள்கின்றேன். குரைஷிகளின் பயணக் குழுக்கள் பொதுவாக எப்போது ஆயுதம் ஏந்தியே இருக்கும். மக்காவிற்கும் சிரியாவிற்கும் சென்று வரும்போது அவர்கள் மதீனாவிற்கு மிக அருகிலேயே கடந்து செல்வார்கள். அதன் காரணமாக எப்போதும் அவர்களிடமிருந்து ஆபத்து இருந்தது. அதுமட்டுமல்லாமல் இந்த பயணக்குழு செல்லுமிடமெல்லாம் அரபு கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டு வந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இதன் காரணமாக முழு நாட்டிலும் முஸ்லிம்களுக்கெதிரான பகைமையின் ஒரு அபாயகரமான நெருப்பு மூட்டப்பட்டிருந்தது. எனவே அதனைத் தடுத்து நிறுத்துவது அவசியமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பயணக் குழுவின் செய்தியை அறிந்து

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அந்த இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களும் யாரும் கண்டுபிடித்து விடாத வகையில் மிக எச்சரிக்கையுடன் ஒளிந்து மறைந்து ஈஸ் என்ற அந்த ஊரை அடைந்து அப்பயணக் குழுவை பிடித்தார்கள். ஈஸ் என்பது ஒரு ஊரின் பெயராகும். அது மதீனாவிலிருந்து நான்கு நாள் பயணத் தொலைவிலுள்ள கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது.

இதுவொரு திடீர் தாக்குதலாக அமைந்திருந்தது. அதனால் குரைஷிகளின் பயணக் குழுவால் முஸ்லிம்களின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் தமது பொருட்களைப் போட்டு விட்டு ஓடிவிட்டனர். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் சில கைதிகளைப் பிடித்தார்கள். மேலும் அந்த பயணக் குழுவின் பொருட்களை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு மதீனாவை நோக்கி திரும்பிச் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **670)**

இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். படை அனுப்பப்பட்டது மற்றும் போர் நடைபெற்றது என்றால் பயணக் குழுக்களிடமிருந்து ஏதாவதொரு செய்தி முஸ்லிம்களுக்கு கிடைத்து வந்தது. அதாவது முஸ்லிம்களுக்கு எதிராக சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அல்லது தாக்குதல் நடத்துவதற்கு திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்ற தகவல்களெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்திருந்தன.

அடுத்து ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி **6** ஆம் ஆண்டு ஜமாதிவுல் ஆகிர் மாதத்தில் தரஃப் ஊரை நோக்கி ஒரு போருக்கு அனுப்பப்பட்டார்கள். இதைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

பனு லஹ்யானிற்கு எதிரான போருக்குப் பிறகு சில காலம் கழிந்து ஜமாதிவுல் ஆகிர் மாதத்தில் ஹிஜ்ரி **6** ஆம் ஆண்டு ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் **15** சஹாபாக்களைக் கொண்ட ஒரு படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். தரஃப் என்ற இந்த ஊர் மதீனாவிலிருந்து **36** மைல் தொலைவில் உள்ளது. அந்த இடத்தில் அந்நாட்களில் பனு சஃலபா கோத்திரத்தின் மக்கள் வசித்து வந்தார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அந்த இடத்தை அடைவதற்கு முன்பாகவே அக்கோத்திரத்தின் மக்கள் குறித்த நேரத்தில் தகவல் அறிந்து இங்கும் அங்கும் சிதறுண்டு விட்டார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடைய தோழர்கள் சில நாட்கள் அங்கு தங்கியிருந்து விட்டு பின்னர் மதீனாவிற்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **680,681)**

அவர்கள் எந்தப் போரும் செய்யவில்லை. மேலும் யாரையும் அவர்கள் தேடவில்லை.

அடுத்து ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் பங்கு பெற்ற மற்றும் ஒரு போர் உள்ளது. அது ஹிஜ்ரி **6** ஆம் ஆண்டு ஜமாதிவுல் ஆகிர் மாதத்தில் ஹிஸ்மா என்ற இடத்தை நோக்கி அன்னார் அனுப்பி வைக்கப்பட்டார்கள். இதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் **500** முஸ்லிம்களுடன் ஹிஸ்மா என்ற ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அந்த ஊர் மதீனாவிலிருந்து வடக்கு பக்கத்தில் பனு ஜஸ்ஸாம் கோத்திரத்தின் வசிப்பிடமாக இருந்தது. அவர்கள் அங்கு வசித்து வந்தனர். இந்த திட்டத்தின் நோக்கம் இதுவாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தஹ்யா கல்பி என்ற பெயருடைய ஒரு சஹாபி சிரியா நாட்டிற்கு சென்று ரோமானிய அரசரான கைஸரை சந்தித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். அவரிடத்தில் சில பொருட்களும் இருந்தன. கைஸர் அவர்களிடமிருந்து சில பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் கொஞ்சம் வியாபாரப் பொருட்களும் இருந்தன.

தஹ்யா அவர்கள் பனு ஜஸ்ஸாம் என்ற பகுதியை கடந்து சென்றார்கள். அப்போது அக்கோத்திரத்தின் தலைவரான ஹுனைது பின் ஹாரிஸ் தனது கோத்திரத்தைச் சார்ந்த ஒரு குழு ஒன்றை அழைத்துக் கொண்டு தஹ்யா அவர்கள் மீது தாக்குதல் நடத்தினான். மேலும் அந்த சஹாபியிடமிருந்த அனைத்துப் பொருட்களையும் கைஸர் கொடுத்திருந்த பொருட்களையும் கூட பறித்துச் சென்றான். எந்த அளவுக்கு அவன் அநீதியிழைத்தான் என்றால் தஹ்யா அவர்களின் உடலில் கிழிந்த ஆடைகளை மட்டுமே விட்டு விட்டுச் சென்றான். பனு ஜஸ்ஸாம் கோத்திரத்தின் ஒரு கிளையான பனு லபீப் கோத்திரத்திற்கு இந்த தாக்குதலைப் பற்றிய தகவல் கிடைத்தது. அக்கோத்திரத்தில் சிலர் முஸ்லிம்களாகி இருந்தார்கள்.

எனவே அவர்கள் பனு ஜஸ்ஸாம் கோத்திரத்தின் அக்குழுவை பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் பறித்து விட்டுச் சென்ற பொருட்களை அவர்களிடமிருந்து திரும்ப பெற்று வந்தார்கள். தஹ்யா அந்த பொருட்களைப் பெற்றுக் கொண்டு மதீனா வந்தடைந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியான தஹ்யா அவர்கள் மதீனாவிற்கு வந்தடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனைத்தையும் தெரிவித்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். மேலும் தஹ்யா அவர்களையும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் படை மிக எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் பகலில் மறைந்திருந்து இரவில் பயணம் செய்து வந்தது.

இவ்வாறு பயணம் செய்தவாறு ஹிஸ்மி என்ற ஊரை நோக்கி முன்னேறியது. சரியாக காலை வேளையில் பனு ஜஸ்ஸாம் கோத்திரத்தின் மக்களை சென்று பிடித்தது. பனு ஜஸ்ஸாம் கோத்திரம் படையை எதிர்கொண்டது. அங்கு முறையாக போர் நடந்தது. ஆயினும் முஸ்லிம்களின் திடீர் தாக்குதலுக்கு முன்பு அவர்களின் பாதங்கள் தடுமாறின. சிறிய எதிர்ப்பிற்குப் பிறகு அவர்கள் ஓடிவிட்டனர். மைதானம் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஏராளமான பொருட்களையும், செல்வங்களையும், கால்நடைகளையும், சுமார் **100** கைதிகளையும் பிடித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். அன்னார் மதீனாவை வந்தடைவதற்கு முன்பாகவே பனு ஜஸ்ஸாம் கோத்திரத்தின் ஒரு கிளையான பனு லபீப் கோத்திரத்தின் மக்களுக்கு ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் இந்த படையின் தகவல் கிடைத்தது. அக்கோத்திரம் தமது தலைவரான ரஃபா பின் ஸைது அவர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தது. மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் முஸ்லிமாகி விட்டோம் என்றும் கூறியது.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று இவர்கள் பொருட்களை திரும்ப மீட்டுக் கொடுத்த மக்கள் ஆவார்கள். எனவே அவர்கள் கூறினர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் முஸ்லிமாகி

விட்டோம். எங்களது மற்ற மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக அவர்களுடன் உடன்படிக்கை எழுதப்பட்டு விட்டது. அவ்வாறிருக்க இந்த தாக்குதல்களில் எங்களது கோத்திரம் ஏன் ஈடுபடுத்தப்பட்டது? அந்த தாக்குதலில் அக்கோத்திரத்தைச் சார்ந்த சில மக்கள் பங்கு பெற்றிருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! இது சரிதான். ஆனால் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு இதுபற்றி தெரியாது என்று கூறினார்கள். மேலும் அந்த சம்பவத்தில் யாரெல்லாம் கொல்லப்பட்டார்களோ அவர்களுக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் தமது இரங்கலை தெரிவித்தார்கள்.

அப்போது ரஃபாவின் தோழரான அபூ ஸைது கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எவர்கள் கொலை செய்யப்பட்டார்களோ அவர்கள் தொடர்பாக நாங்கள் எந்த முறையீடும் செய்யவில்லை. அதுவொரு தவறான புரிதலில் நடைபெற்ற விபத்தாகும். உடன்படிக்கை செய்திருந்த எங்கள் மக்களும் அதில் பங்குபெற்று விட்டார்கள். அது நடந்து விட்டது. ஆனால் உயிருடன் இருக்கின்ற மக்களும் எங்களின் கோத்திரத்திடமிருந்து ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் எடுத்துச் சென்ற பொருட்களும் எங்களுக்கு திரும்பக் கிடைக்க வேண்டும். அதற்கு ஆம்! இது சரிதான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை உடனடியாக ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். மேலும் அதற்கு அடையாளமாக தனது வாளையும் கொடுத்து அனுப்பினார்கள். இக்கோத்திரத்தைச் சார்ந்த கைதிகளையும், செல்வங்களையும் நீங்கள் அவர்களிடம் திருப்பி அனுப்பி விடுங்கள் என்ற கட்டளையை கொடுத்து அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் கட்டளை கிடைத்தவுடன் அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்தார்கள். மேலும் அவர்களிடமிருந்து கிடைத்த போர் செல்வங்களை திருப்பி ஒப்படைத்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 681,682)

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடன்படிக்கையை பேணிய முன்மாதிரியாகும். பிடித்த பிறகு அநீதியிழைப்பது அன்னாரின் முன்மாதிரியாக இருக்கவில்லை. மாறாக, தவறான புரிதலின் காரணமாக நிகழ்ந்த தவறு சரி செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரையும் விடுவித்தார்கள். அவர்களின் பொருட்களையும், செல்வங்களையும் திரும்ப ஒப்படைத்து விட்டார்கள்.

அடுத்து ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் வாதியுல் கரா என்ற இடத்திற்கு போருக்காக அனுப்பப்பட்டார்கள். அதைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹிஸ்மி போர் நடந்து ஒரு மாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மீண்டும் வாதியுல் காரவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் படை வாதியுல் கராவை அடைந்தபோது பனு ஃபஸரா கோத்திரத்தின் மக்கள் அவர்களை எதிர்கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். எனவே இந்த போரில் பல முஸ்லிம்கள் ஷஹீதும் ஆனார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. ஆனால் அல்லாஹ் தனது அருளால் பாதுகாத்து விட்டான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த போரில் வாதியுல் கராவைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அந்த இடம் மதீனாவின் வடக்குப் பகுதியில் சிரியா செல்லும் வழியில் அமைந்துள்ள ஓர் இடமாக இருந்தது. அங்கு ஏராளமான நகரங்கள் இருந்தன. அதன் காரணமாகவே அந்த ஊருக்கு வாதியுல் கரா என்று பெயர் சூட்டப்பட்டது. அதாவது நகரங்களைக் கொண்ட ஊர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 682,683)

இந்தப் போர் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு நடந்தது. மூத்தா எனும் ஊர் பில்கா ஊருக்கு அருகில் சிரியா நாட்டில் உள்ள ஓர் இடமாகும்.

இந்தப் போருக்கான காரணங்களை எடுத்துரைத்தவாறு அல்லாமா சஅது அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் அவர்களை தனது தூதராக நியமித்து பஸ்ரா நாட்டின் அரசருக்கு கடிதம் கொடுத்து அனுப்பினார்கள். அன்னார் மூத்தா என்ற இடத்தை அடைந்தபோது ஷர்ஹபீல் பின் அம்ர் கஸ்ஸானி என்பவன் அன்னாரை ஷஹீதாக்கினான். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் உமைர் அவர்களைத் தவிர்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த தூதரும் ஷஹீதாக்கப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது மிகவும் துன்பத்தை தந்தது. அன்னார் மக்களை அழைத்தார்கள். ஜரஃப் என்ற இடத்தில் மக்கள் அனைவரும் மிக வேகமாக ஒன்று கூடினார்கள். அவர்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது கூறினார்கள்: அனைவரின் அமீர் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஆவார்கள். மேலும் ஒரு வெள்ளை கொடி ஒன்றை தயார் செய்து ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடத்தில் கொடுத்து இவ்வாறு அறிவுரை செய்தார்கள்.

ஹாரிஸ் பின் உமைர் எங்கு ஷஹீதானார்களோ அந்த இடத்தை சென்றடைந்து மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள். அவர்கள் அதை ஒப்புக் கொண்டு விட்டால் நல்லது. இல்லையென்றால் அவர்களுக்கெதிராக அல்லாஹ்விடத்தில் உதவி தேடுங்கள். மேலும் அவர்களுடன் போர் புரியுங்கள். மூத்தா போர் ஜமாதிவுல் அவ்வல் மாதத்தில் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு நடைபெற்றது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 97,98 மூத்தா போர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 34 ஸைது பின் ஹாரிஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்ய1ாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மூத்தா போரின் அமீராக நியமனம் செய்தார்கள். மேலும் ஒருவேளை ஹஸ்ரத் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டால் ஜாஃபர் அமீராக இருப்பார்கள். ஜாஃபரும் ஷஹீதாகி விட்டால் அப்துல்லாஹ் பின் ரவாஹா உங்களது அமீராக இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த படையை ஜய்ஷுல் அம்ரா என்றும் கூறுவார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி, மூத்தா போர்... ஹதீஸ் எண் 4261 & முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 505 ஹதீஸ் எண் 22918, முஸ்னது அபூகிதாதா அன்ஸாரி (ரலி) – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியிலும், முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் ஆகிய ஹதீஸ் நூல்களிலும் இதைப் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்கு ஹஸ்ரத் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அமீராக நியமனம் செய்வீர்கள் என்ற எண்ணம் ஒருபோதும் வந்ததில்லை என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த விஷயத்தை விட்டு விடுங்கள். ஏனென்றால் சிறந்தது எது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லா பின் சஅது தொகுதி 2 பக்கம் 34 ஸிக்ர் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு வகையில் நான் இந்த சம்பவத்தைப் பற்றி சில வாரங்களுக்கு முன்போ அல்லது சில மாதங்களுக்கு முன்போ குத்பாக்களில் சிறிதளவு குறிப்பிட்டிருக்கின்றேன். எவ்வாறிருப்பினும் இங்கு ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களைப் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருப்பதால் நான் மீண்டும் அதைக் குறிப்பிடுகின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மூத்தா போரைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: இந்த போருக்கு தளபதியாக ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நியமித்தார்கள். மேலும் அத்துடன் கூறினார்கள்: நான் தற்போது ஸைதை படையின் தளபதியாக நியமனம் செய்கின்றேன். ஒருவேளை ஸைது போரில் கொல்லப்பட்டால் அவரது இடத்தில் ஜாஃபர் படைக்கு தலைமை தாங்குவார். ஒருவேளை அவரும் கொல்லப்பட்டு விட்டால் பின்னர் அப்துல்லாஹ் பின் ரவாஹா படைக்கு தலைமை தாங்குவார். அவரும் கொலை செய்யப்பட்டு விட்டால் பின்னர் முஸ்லிம்கள் யாரை ஏற்றுக் கொள்வார்களோ அவர் படைக்கு தலைமை தாங்கட்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைக் கூறிய போது ஒரு யூதரும் அன்னாருக்கு அருகில் அமர்ந்திருந்தார். அவர் கூறினார்: நான் உங்களை நபியாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும், தாங்கள் உண்மையான நபி என்றால் இந்த மூவரில் எவரும் உயிருடன் தப்பித்து வர மாட்டார்கள். ஏனென்றால் நபியின் வாயிலிருந்து வெளியேறிய வார்த்தைகள் நிறைவடைந்தே தீரும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூறிய விஷயத்தில் ஏறக்குறைய குறிப்பு இவ்வாறு இடம் பெற்றிருந்தது. அதாவது யூதர் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடத்தில் சென்று இதனைக் கூறினார். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த அறிவிப்பை இவ்வாறு பதிவிட்டுள்ளார்கள். பின்னர் அந்த யூதர் கூறிய அதே விஷயம் அப்படியே எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இதனைக் குறிப்பிடுகின்றார்கள். அதாவது அந்த யூதர் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடத்தில் சென்றார். பின்னர் உங்கள் தூதர் உண்மையாளர் என்றால் நீங்கள் உயிருடன் திரும்ப மாட்டீர்கள் என்று கூறினார். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள், நான் உயிருடன் வருவேனா? மாட்டோனா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். எனினும் எங்களது தூதர் (ஸல்) அவர்கள் நிச்சயமாக உண்மையான தூதராவார்கள் என்று கூறினார்கள்.

இந்த சம்பவம் முற்றிலும் அவ்வாறே முழுமையடைந்தது. இதுவே அல்லாஹ்வின் நுட்பமான ஞானமாக இருந்தது. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் ஷஹீதானார்கள். அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் படைக்கு தலைமை தாங்கினார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) படைக்கு தலைமை தாங்கினார்கள். அவர்களும் ஷஹீதானார்கள். படை சிதறுண்டு போகும் சூழல் ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முஸ்லிம்கள் கூறியதன் அடிப்படையில் கொடியை தனது கரத்தால் பிடித்தார்கள். அல்லாஹ் அவர்களின் மூலமாக முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். அன்னார் பாதுகாப்பாக படையை அழைத்து வந்தார்கள்.

(ஃபரீஸா தப்லீக் அவ்ர் அஹ்மதி ஹவாதீன், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 405,406)

புகாரியில் இந்த சம்பவம் பற்றிய அறிவிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் கொடியை பிடித்தார்கள். அன்னார் ஷஹீதானார்கள். பின்னர் ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் கொடியை பிடித்தார்கள். அன்னாரும் ஷஹீதானார்கள். பின்னர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் கொடியை பிடித்தார்கள். அவர்களும் ஷஹீதானார்கள். இந்த செய்தியை கூறிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. பின்னர் கொடியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பிடித்தார்கள். அன்னாருக்கு வெற்றி கிடைத்தது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1246)

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோரின் ஷஹாதத் தொடர்பான செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் நிலைகளை எடுத்துரைக்க எழுந்து நின்றார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களைப் பற்றி கூறி ஆரம்பம் செய்தார்கள். அல்லாஹ்வே! ஸைதை மன்னிப்பாயாக. அல்லாஹ்வே! ஸைதை மன்னிப்பாயாக. அல்லாஹ்வே! ஸைதை மன்னிப்பாயாக. பின்னர் ஜாஃபர் மற்றும் அப்துல்லாஹ் பின் ரவாஹா ஆகியோரை மன்னிப்பாயாக என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 34 ஸைது பின் ஹாரிஜா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோர் ஷஹீதான போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளியில் அமர்ந்து விட்டார்கள். அன்னாரின் முகத்தில் துக்கம் மற்றும் துன்பத்தின் தாக்கம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது என ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(சுனன் அபீ தாவூது கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 3122)

தப்காத்துல் குப்ரா என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் குடும்பத்தினரிடம் இரங்கல் தெரிவிப்பதற்காக சென்றார்கள். அப்போது அன்னாரின் மகளின் முகத்திலிருந்து அழுகைக்கான தாக்கம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஸைது அவர்களின் மகளின் நிலைமையை இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டபோது அன்னாரது கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. அப்போது ஹஸ்ரத் ஸைது பின் உபாதா

(ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது என்ன? என்று கேட்டார்கள். உங்களின் கண்களிலிருந்து கண்ணீர் வருகின்றதே? என்றும் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹாதா ஷவ்குல் ஹபீப் இலல் ஹபீப் அதாவது இது தனது நேசரின் மீது ஒரு நேசருக்கு இருக்கும் நேசமாகும் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 34 ஸைது பின் ஹாரிஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு அல்லாமா சஅது அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூத்தா போரில் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை அமீராக நியமனம் செய்தார்கள். மற்ற தலைவர்களை விட அன்னாருக்கு முக்கியத்துவம் வழங்கினார்கள். முஸ்லிம்களுக்கும் இணை வைப்பவர்களுக்கும் இடையில் சண்டை நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமனம் செய்யப்பட்ட அமீர்மார்கள் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் கொடியை பிடித்தார்கள். சண்டையிட்டார்கள். ஏனைய மக்களும் அன்னாருடன் இணைந்து போரிட்டார்கள்.

போரின்போது ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் அம்பு தாக்கியதன் காரணத்தால் ஷஹீதானார்கள். ஷஹாதத்தின் காரணத்தின்போது அன்னாருக்கு வயது 55 ஆக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுங்கள் என்று கூறியவாறு, அவர்கள் சுவர்க்கத்திற்குள் ஓடியவாறு நுழைந்து விட்டார்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 33,34 ஸைது பின் ஹாரிஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜப்லா அவர்களின் மற்றொரு அறிவிப்பு இருக்கின்றது. அன்னார் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இரண்டு மேலாடை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றை தான் வைத்துக் கொண்டு மற்றொன்றை ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுக்கு வழங்கி விட்டார்கள்.

(கன்ஸூல் உம்மால் தொகுதி 13 பக்கம் 397, பாப் ஃபஸாயிலுஸ் சஹாபா... ஹதீஸ் எண் 37066 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

பின்னர் இன்னும் ஒரு இடத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசர் என்று அழைக்கப்பட்டது.

ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களில் இவர் எல்லாரையும் விட மிக அன்பிற்குரியவர் ஆவார். மேலும் இவர் மீது அல்லாஹ் அருள் செய்துள்ளான். அதாவது ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் மீது. அல்லாஹ் இஸ்லாத்தின் மூலமாக அன்னார் மீது அருள் செய்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை விடுதலை செய்து அருள் செய்தார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூபத்திஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 117 ஸைது பின் ஹாரிஸா (ரலி) – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மூத்தா போர் தொடர்பாக பல்வேறு வரலாற்று புத்தகங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் இவ்வாறாகும். மூத்தா போருக்கு பழிவாங்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெரும் படையை ஆயத்தம் செய்தார்கள். அந்த படையை ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு சஃபர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்கள் தயார் செய்தார்கள். மேலும் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு சஃபர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரோமிற்கு எதிராக போர் செய்ய ஆயத்தமாகுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

மூத்தா போருக்கென்று ஆயத்தப்படுத்திய அந்த போருடன் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு எந்த தொடர்பும் இருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே ஷஹீதாக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் படைக்கான ஆயத்தம் மற்றும் காரணத்தில் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு வருகிறது.

எனவே அந்தப் பகுதியை நான் கூறி விடுகின்றேன். சில பகுதி ஹஸ்ரத் உஸாமா அவர்களைப் பற்றிய குறிப்புடன் சில காலத்திற்கு முன்பே செய்யப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபியாக இருக்கவில்லை. அப்போது அன்னார் மிகவும் சிறிய வயதைக் கொண்டவராக இருந்தார்கள். ஆயினும் பொதுவாக சஹாபாக்களைப் பற்றி கூறிய குறிப்புகளில் அவர்களது குறிப்பும் இடம் பெற்று விட்டது.

எவ்வாறிருப்பினும் இந்த படை ஆயத்தமானது. அடுத்த நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களை அழைத்தார்கள். அங்கு போருக்கான தலைமைத்துவ பொறுப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் ஒப்படைத்தார்கள். மேலும் உங்களது தந்தை ஷஹீதான அதே இடத்திற்குச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

மேலும் சிரியா நாட்டிற்கு அனுப்பியவாறு இவ்வாறும் கூறினார்கள்: நீங்கள் புறப்படும் போது வேகமாக பயணம் செய்ய வேண்டும். அவர்களுக்கு தகவல் கிடைப்பதற்கு முன்பாகவே நீங்கள் அங்கு சென்று சேர்ந்து விட வேண்டும். பின்னர் காலை விடிந்ததும் அப்னா நாட்டினருக்கு (அதாவது இந்த இடம் சிரியாவில் உள்ளது) மூத்தா என்ற இடத்திற்கு அருகில் ஒரு இடம் உள்ளது. அங்குதான் மூத்தா போர் நிகழ்ந்தது. எனவே அங்கு தாக்குதல் நடத்துங்கள் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் லூத் அவர்களின் சந்ததிகளில் பாலக் என்ற பெயரைக் கொண்ட ஒரு நபர் அந்த ஊரில் உருவாகின்றார். மேலும் எகிப்திற்கு செல்லும்போது பாலஸ்தீனில் போருக்கு செல்லக்கூடிய ஒரு பகுதி உள்ளது. அங்குதான் இந்த போர் நிகழ்ந்தது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அந்தப் பகுதியை உங்களது குதிரைகளால் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்காக பழிவாங்கும் விதமாக சுற்றி வளைத்து விடுங்கள்.

அத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் உங்களுடன் வழிப்பாதையை காட்டுகின்ற நபரையும் வைத்துக் கொள்ளுங்கள். செல்லுமிடத்தைப் பற்றிய செய்தியை தரக்கூடிய நபரையும் வைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு சரியான நிலைமையை எடுத்துரைக்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்குவானாக. விரைவாக திரும்பி வந்து விடுங்கள்.

இந்த திட்டத்தின்போது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் வயது 17 முதல் 20 வயதிற்கு இடைப்பட்டதாக இருக்கும். ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது கரங்களால் ஹஸ்ரத் உஸாமா அவர்களுக்காக கொடி ஒன்றை ஆயத்தம் செய்தார்கள். பின்னர் அல்லாஹ்வின் பெயருடன் அவனது வழியில் ஜிஹாது செய்யுங்கள். எவர் நிராகரிப்பாரோ அவருடன் போர் புரியுங்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அந்த கொடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். மேலும் அக்கொடியை ஹஸ்ரத் பரீரா (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள். இந்தப் படை ஜரஃப் என்ற இடத்தில் ஒன்று கூடத் தொடங்கியது. ஜரஃப் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஓர் இடமாகும். இந்தப் படையின் எண்ணிக்கை 3000 என்று கூறப்படுகிறது. இந்தப் படையில் முஹாஜிரீன்களும், அன்ஸார்களும் அனைவரும் இடம் பெற்றிருந்தனர். மேலும் அதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உபூ உபைதா பின் அல் ஜராஹ் (ரலி), ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி) போன்ற பெரும் பெரும் சஹாபாக்கள் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஆனால் அந்தப் படைக்கு தளபதியாக ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நியமனம் செய்தார்கள். அவரோ 17, 18 வயதுடையவராகவே இருந்தார். சிலர் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மீது ஆட்சேபனை செய்தார்கள். இந்த சிறுவன் இவ்வளவு சிறிய வயதில் முதன்மையான முஹாஜிரீன்களுக்கு அமீராக ஆக்கப்பட்டுள்ளார் என்றும் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை செவியுற்று மிகவும் கோபமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தலையை ஒரு கைக்குட்டையால் கட்டியிருந்தார்கள். மேலும் ஒரு போர்வையை போர்த்தி இருந்தார்கள். அந்நிலையில் அன்னார் மேடையில் ஏறினார்கள்.

பின்னர் கூறினார்கள்: மக்களே! உஸாமாவின் தலைமைத்துவம் பற்றி நீங்கள் பேசிய சில விஷயம் என்னை வந்தடைந்துள்ளது. இது எப்படிப்பட்ட காரியமாகும். நான் உஸாமாவை அமீராக்கியதை நீங்கள் ஆட்சபேனை செய்கின்றீர்கள். ஆனால் இதற்கு முன்பு அவரது தந்தை ஸைது அவர்களை அமீராக ஆக்கிய போதும் நீங்கள் ஆட்சேபனை செய்திருந்தீர்கள்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! அவர் தன்னகத்தே தலைமைத்துவ பண்புகளைக் கொண்டிருக்கிறார். அதாவது ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களும், அவருக்குப் பிறகு ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களும் தம்முள் தலைமைத்துவ சிறப்புகளை கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் எனக்கு மிகவும் நேசத்திற்குரிய மக்களை சார்ந்தவர்கள் ஆவர். நிச்சயமாக இவர்கள் இருவரும் அனைத்து நன்மைகளுக்கும் உரிமை படைத்தவர்கள் ஆவர்.

எனவே இவரைக் குறித்து அதாவது ஹஸ்ரத் உஸாமாவைக் குறித்து நன்மையான அறிவுரையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் மக்களுக்கு அறிவுரை செய்தார்கள். ஏனென்றால் இவர் உங்களில் மிகச் சிறந்த மக்களைச் சார்ந்தவர் ஆவார். அந்த நாள் ரபீவுல் அவ்வல் மாதம் 10 ஆம் தேதி மற்றும் சனிக்கிழமையாக இருந்தது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவமாகும். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுடன் படையில் புறப்பட இருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று ஜரஃப் என்ற இடத்தில் படையுடன் சென்று போரில் பங்கு பெறுவதற்காக சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோய் அதிகமானது. அப்போது உஸாமாவின் படையை அனுப்பி வையுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்தி கூறினார்கள்.

ஞாயிற்றுக்கிழமை அன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலி மேலும் அதிகமானது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை திரும்பியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மயக்கமுற்ற நிலையில் இருந்தார்கள். மக்கள் அந்த நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மருந்து கொடுத்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தலையைக் குனிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முத்தமிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் பேச முடியாமல் இருந்தது. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இரு கரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் தலையின் மீது வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக துஆ செய்து கொண்டிருப்பதை நான் புரிந்து கொண்டேன் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் படையை நோக்கி திரும்பிச் சென்று விட்டார்கள். திங்கட்கிழமையன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோய் அதிகமானது. அல்லாஹ்வின் அருளால் நீங்கள் புறப்பட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று சென்றார்கள். பின்னர் மக்களுக்கு புறப்படும்படி கட்டளையிட்டார்கள். இதற்கிடையில் அன்னாரின் தாயார் உம்மே அய்மன் தரப்பிலிருந்து ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி தருணமாக தெரிய வருகின்றது என்ற செய்தியை எடுத்துக் கொண்டு ஒரு நபர் வந்தார். உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த வேதனைமிக்க செய்தியை செவிமடுத்த உடனேயே ஹஸ்ரத் உஸாமா (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். திரும்பி வந்து பார்த்தபோது அன்னார் சுயநினைவற்று இருந்தார்கள். ரபீவுல் அவ்வல் 12 ஆம் தேதி திங்கட்கிழமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

அதன் காரணமாக முஸ்லிம்களின் படை ஜரஃப் என்ற இடத்திலிருந்து மதீனாவிற்குத் திரும்பியது. ஹஸ்ரத் பரீதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் வாசல் அருகே நட்டினார். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்ட பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்கள் கொடியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் வீட்டிற்குச் செல்லுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயத்தப்படுத்திய அந்தப் படையை அழைத்துக் கொண்டு தனது நோக்கத்திற்கு அது புறப்படட்டும் என கட்டளை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் பரீதா (ரலி) அவர்கள் கொடியை எடுத்துக் கொண்டு படை இருந்து முந்தைய இடத்திற்குச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முழு அரபு கோத்திரத்திலும் குழப்பமும் பிரிவினையும் பரவி இருந்தது. அவர்களிடத்தில் நயவஞ்சகம் வெளிப்பட்டு இருந்தது. அந்நேரத்தில் யூதர்களும், கிறித்தவர்களும் தமது கண்களை விரித்து ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இனி என்ன நடக்கும்? என்பதை

அறிய ஆவலுடன் காத்திருந்தார்கள். பழிவாங்குதற்கான முன்னேற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் மற்றும் முஸ்லிம்களின் எண்ணிக்கையில் குறைவு ஆகியவற்றின் காரணங்களால் புயல் வீசும் இரவில் தனித்து நின்று கொண்டிருந்த ஆட்டினை போன்றதாக முஸ்லிம்களின் நிலை இருந்தது. முஸ்லிம்களின் நிலை மிகவும் கடினமான நிலையாக இருந்தது. பெரும் பெரும் சஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று நெருக்கடியான தருணத்தை கருத்தில் கொண்டு தற்போது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை அனுப்புவதில் தாமதப்படுத்துங்கள். சில காலம் கழித்து அந்த படை புறப்படலாம் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. என்னை விலங்குகள் இழுத்துக் கொண்டு சென்றாலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பிற்கேற்ப அந்த படையை அனுப்பியே தீருவேன் என்று கூறினார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்த முடிவை நிறைவேற்றியே தீருவேன் என்றும் கூறினார்கள். நகரங்களில் என்னைத்தவிர வேறு எவரும் இல்லையென்றாலும் கூட அந்நிலையிலும் நான் அந்த தீர்ப்பை செயல்படுத்தியே தீருவேன் என்றும் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை முடிந்த வரை நிலைநாட்டினார்கள். பின்னர் அதனை அமல்படுத்தினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையில் பங்கு பெற்றிருந்த சஹாபாக்களை ஜரஃப் என்ற இடத்திற்கு திரும்பிச் சென்று படையுடன் இணையுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையில் இணையும்படி கட்டளையிட்டிருந்த எந்தவொரு நபரும் எந்நிலையிலும் பின்வாங்கக் கூடாது. அவர்கள் அனைவரும் அந்தப் படையுடன் இணைந்து விட வேண்டும். அவர்கள் பின்தங்கி இருப்பதற்கு நான் அனுமதி தர மாட்டேன் என்றும் கூறினார்கள். அவருக்கு நடந்து செல்ல நேரிட்டாலும் கண்டிப்பாக அவர் செல்ல வேண்டும்.

எவ்வாறிருப்பினும் படை மீண்டும் ஒரு முறை ஆயத்தமானது. சில சஹாபாக்கள் நெருக்கடியான சூழ்நிலையின் காரணமாக இப்போது படையை தடுத்து நிறுத்தி விடுங்கள் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், நீங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று படை புறப்படுவதற்கான கட்டளையை ரத்து செய்யும்படி கூறுங்கள். அவ்வாறு செய்தால் நாம் கிளர்ச்சியாளர்களுடன் எதிரில் போரிட முடியும் என்று கூறினார்கள். மேலும் அந்நிலையில் நம்மால் ரஸூலின் கலீஃபாவையும், ரஸூலின் நகரத்தையும், முஸ்லிம்களையும் இணை வைப்பவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க முடியும் என்றும் கூறினார்கள்.

அதுமட்டுமின்றி வேறு சில அன்ஸார் சஹாபாக்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாகிய ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையை அனுப்புவதிலேயே பிடிவாதமாக இருந்தால் வயதில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை விட வயதில் பெரியவரை படைக்கு தளபதியாக நியமிக்கும்படி விண்ணப்பம் செய்யுங்கள் என்று கூறினார்கள். மக்களின் இந்த கருத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீண்டும் அதே உறுதியுடன், காட்டு மிருகங்கள் மதீனாவிற்கு நுழைந்து என்னை எடுத்துக் கொண்டு சென்றாலும் சரியே! எந்த பணியை செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்களோ அந்த பணியை செய்வதிலிருந்து நான் ஒருபோதும் விலக மாட்டேன் என்று கூறினார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில அன்ஸார் சஹாபாக்களின் தூதுச் செய்தியை கூறினார்கள். அதைக் கேட்ட உடனேயே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கம்பீரமாக கூறினார்கள். அவரை அதாவது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமீராக நியமனம் செய்துள்ளார்கள். அவ்வாறிருக்க நான் அவரை அந்த பொறுப்பிலிருந்து அகற்றி விட வேண்டும் என்று நீங்கள் என்னிடம் கூறுகின்றீர்களா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உறுதிமிக்க இறுதியான தீர்ப்பை செவிமடுத்த உடன் மேலும் அன்னாரின் மன உறுதியை பார்த்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் படையினரை வந்தடைந்தார்கள். மக்கள், என்ன ஆனது? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் கோபத்துடன், இங்கிருந்து உடனே சென்று விடுங்கள். உங்களின் காரணமாக இன்று எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவிடம் திட்டு வாங்க நேரிட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைகேற்ப ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை ஜரஃப் என்ற ஊரில் ஒன்று கூடியது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அங்கு சென்றார்கள். அங்கு சென்று அன்னார் படையை ஆய்வு செய்தார்கள். மேலும் அவர்களுக்கு பயிற்சி வழங்கினார்கள். அப்படை புறப்படும் நேரமும் மிக வியப்பிற்குரியதாக இருந்தது. அந்நேரத்தில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் சவாரியில் அமர்ந்திருந்தார்கள். ஆனால் கலீஃபத்துர் ரஸூல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதரின் கலீஃபா அவர்களே! நீங்கள் சவாரியில் அமர்ந்து விடுங்கள். அல்லது நானும் கீழே இறங்கி விடுகிறேன் என்று ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நீங்களும் சவாரியிலிருந்து கீழே இறங்க மாட்டீர்கள். நானும் சவாரியில் அமர மாட்டேன். நான் நடந்து வந்தால் என்னவாகி விடப்போகிறது. நான் எனது இரண்டு கால்களையும் அல்லாஹ்வின் வழியில் ஒரு நொடிப்பொழுதிற்காவது தூசிபடச் செய்ய வேண்டாமா?

ஏனென்றால் போராளி அல்லாஹ்வின் வழியில் அடியெடுத்து வைக்கின்றபோது அவருக்கு அதற்கு பகரமாக 700 நன்மைகள் எழுதப்படுகின்றன. 700 மடங்கு உயர்ந்த அந்தஸ்து அவருக்கு வழங்கப்படுகிறது. மேலும் அவரது 700 தீமைகள் அழிக்கப்படுகின்றன என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மதீனாவில் பல பணிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தேவை இருந்தது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தானே தடுத்து நிறுத்துவதற்கு பகரமாக ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். நீங்கள் சிறந்ததாக கருதினால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் மதீனாவில் தங்க அனுமதி அளியுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு கட்டுப்பட்டவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மதீனாவில் தங்குதற்கு அனுமதி வழங்கினார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை எப்போது சந்தித்தாலும் اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا الْأَمِيْرُ என்றே கூறி வந்தார்கள். அதாவது அமீரே! உம்மீது சலாம் உண்டாகட்டுமாக. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அதற்குப் பதிலாக, غَفَرَ اللّٰهُ لَكَ يَا أَمِيْرَ الْمُؤْمِنِيْنَ என்று கூறி வந்தார்கள். அதாவது நம்பிக்கையாளர்களின் அமீரே! அல்லாஹ் உங்களுடன் மன்னிப்பின் நடைமுறையை மேற்கொள்வானாக.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறுதியில் அந்தப் படைக்கு இந்த சொற்களில் அறிவுரை வழங்கினார்கள். அதாவது நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்யக்கூடாது. உடன்படிக்கையை முறிக்கக் கூடாது. திருடக் கூடாது. இறந்த எதிர் படை வீரர்களின் உடலை சிதைக்கக் கூடாது. சிறிய வயதுடைய பிள்ளைகள், முதியவர்கள், பெண்களை கொலை செய்யக் கூடாது. பேரீச்சம் பழ மரங்களை வெட்டக்கூடாது. அதனை எரிக்கவும் கூடாது. ஆடுகளையுடம், ஒட்டகங்களையும் உண்பதற்காக அன்றி வேறு எதற்காகவும் பழியிடக்கூடாது.

மேலும் அன்னார் கூறினார்கள்: நீங்கள் நிச்சயமாக தேவாலயங்களில் அமர்ந்து இறைவணக்கத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சமுதாயத்தை கடந்து செல்வீர்கள். அவ்வாறு செல்லும்போது நீங்கள் அவர்களை விட்டுவிட வேண்டும். மேலும் தங்களது பாத்திரங்களில் வகை வகையான உணவுகளை உங்களுக்கு கொண்டு வருவார்கள். அப்படிப்பட்ட மக்கள் நீங்கள் சந்திப்பீர்கள். அந்நிலையில் அந்த பாத்திரத்திலிருந்து நீங்கள் உண்ணும்போது பிஸ்மில்லாஹ் என்று ஓதி உண்ண வேண்டும். மேலும் தமது தலைகளை நடுவில் வழித்துக் கொண்ட மக்களைக் கொண்ட சமுதாயத்தை நிச்சயமாக நீங்கள் கடந்து செல்வீர்கள்.

எனவே நீங்கள் அதுபோன்ற மக்களை வாளைக் கொண்டு சிறிதளவு காயப்படுத்தலாம். மேலும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்களை சாபத்திலிருந்தும், ப்ளேக் நோய் போன்ற கொடிய நோய்களிலிருந்தும் பாதுகாப்பானாக.

மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு என்ன என்ன கட்டளைகளை செய்யும்படி வழங்கினார்களோ அவை அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

இந்த அனைத்து கூற்றுகளிலிருந்தும் இது வெளிப்படுகின்றது. அதாவது எங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுக்கு இஸ்லாமிய படையின் ஒழுங்குமுறைகளை அதாவது எவரும் அநீதியிழைக்கக் கூடாது என்று கூறினார்களோ அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த படை நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் அதிகமாக இருந்தது என்பதும் வெளிப்படுகிறது. எனவேதான் உங்களுக்கு வெற்றிகள் கிடைக்கும் என்று அன்னார் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீவுல் ஆகிர் முதல் தேதியன்று ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை புறப்பட்டது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தமது படையுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டு பல்வேறு இடங்களை கடந்து சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த வஸிய்யத்திற்கேற்ப சிரியாவின் பகுதியான அப்னா என்ற இடத்தை அடைந்தார்கள். காலை விடிந்ததும் நகரத்தின் நாலா புறமிருந்தும் எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். இந்தப் போரில் يَا مَنْصُوْرُ اَمِتْ என்ற முழக்கமும் கவிதையும் இடம் பெற்றது. அதாவது உதவி பெற்றவர்களே! நீங்கள் கொல்லுங்கள் என்பதன் அதன் பொருளாகும். இந்தப் போரில் முஜாஹிதீன் முஸ்லிம்களை எதிர்த்து யாரெல்லாம் நின்றார்களோ அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள். ஏராளமான நபர்கள் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டார்கள். அதாவது ஏராளமான போர் செல்வங்களும் கிடைத்தன. அதில் ஐந்தில் ஒன்றை வைத்துக் கொண்டு மீதமுள்ளதை படையினருக்கு மத்தியில் பங்கிடப்பட்டது. சவாரியில் வந்தவரின் பங்கு நடந்து வந்தவரின் பங்கை விட இரண்டு மடங்கு அதிமாகும். இந்தப் போர் முடிந்த பிறகு அந்தப் படை ஒரு நாள் அதே இடத்தில் தங்கியது.

அடுத்த நாள் மதீனாவிற்கு திரும்பிச் செல்வதற்கான பயணத்தை மேற்கொண்டது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் மதீனாவிற்கு நற்செய்தி வழங்கக்கூடிய ஒருவரை அனுப்பி வைத்தார்கள். இந்தப் போரில் முஸ்லிம்களின் ஒரு நபர் கூட ஷஹீதாகவில்லை. இந்த வெற்றி பெற்ற படை மதீனாவை வந்தடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார் சஹாபாக்களுடன் மதீனாவை விட்டு வெளியே வந்து படையை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

ஹஸ்ரத் பரீதா (ரலி) அவர்கள் கொடியை பறக்கச் செய்தவாறு படைக்கு முன்னால் வந்து கொண்டிருந்தார்கள். மதீனாவில் நுழைந்த படை மஸ்ஜிது நபவி வரை சென்றடைந்தது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழுதார்கள். பின்னர் தனது வீட்டிற்குச் சென்று விட்டார்கள். இந்த படை 40 முதல் 70 நாட்கள் வரை வெளியில் தங்கிய பிறகு மதீனாவை வந்தடைந்தது என்று பல்வேறு அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை அனுப்பி வைப்பது முஸ்லிம்களுக்கு ஏராளமான நன்மைக்கு காரணியாக அமைந்தது. ஏனென்றால் முஸ்லிம்களிடத்தில் பெரும் ஆற்றலும் வலிமையும் இல்லையென்றால் அவர்கள் ஒருபோதும் இந்த படையை அனுப்பி வைத்திருக்க மாட்டார்கள் என்று அரபு கோத்திரங்கள் பேசத் தொடங்கினர்.

ஆக, எவர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தார்களோ அவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக செய்ய நாடிய ஏராளமான விஷயங்களிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 145–147 உஸாமா பின் ஸைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 579 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இறைவனின் அருளாலும், அவனது உதவியாலும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை சொல்லுக்கு சொல் முழுமை செய்து காட்டினார்கள். அமைப்பு ரீதியில் இந்தப் படை மிகவும் திட்டமிடப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட படை என்பதையும், இந்தப் படை மிகவும் வெற்றிகரமான படை என்பதையும் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தமது செயலால் நிரூபணம் செய்தார்கள். இவர் சிறந்த தலைவர் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

இறைவனின் அருளாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் காலத்தின் கலீஃபாவின் துஆவின் பரக்கத்தாலும் இவ்விஷயம் நிரூபணமானது. அதாவது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களும் தமது உயிர்த் தியாகியான தந்தையைப் போன்று தலைமைப் பதவிற்கு தகுதியானவர் மட்டுமல்ல. மாறாக, பல்வேறு சிறப்புகளையும் பண்புகளையும் அன்னார் பெற்றிருந்தார்கள். இது காலத்தின் கலீஃபாவின் உறுதி, வலிமை மற்றும் உயர்ந்த எண்ணமாகும். அது ஏராளமான உட்புற மற்றும் வெளிப்புற அபாயங்கள் மற்றும் ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் அந்தப் படையை அனுப்பி

வைத்தார்கள். பின்னர் இறைவன் வெற்றிகளை வழங்கி முஸ்லிம்களுக்கு முதல் படிப்பினையாக இதனை கற்றுக் கொடுத்தான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இனி அனைத்து அருட்களும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில்தான் உள்ளது என்பதே அந்த பாடமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் சிர்ருல் கிலாஃபா என்ற புத்தகத்தில் இந்த சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்கள்.

(சிர்ருல் கிலாஃபா, ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 394 அடிக்குறிப்பு)

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மீதும், அன்னாரின் மகன் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் மீது ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளையும், பரக்கத்துகளையும் இறக்குவானாக. ஏனென்றால் அவர்கள் இருவரும் நமது எஜமானர் மற்றும் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவர்களாகவும், நேசத்திற்குரியவர்களாகவும் இருந்தார்கள்.

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சித்தீக் ஆதம் தும்பியா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஐவெரிகோஸ்ட்டின் முபல்லிகாக இருந்தார்கள். ஒரு நீண்ட காலமாக நோயுற்றிருந்தார்கள். கடந்த வருடம் பிராஸ்ட்ரேட் அறுவை சிகிச்சையும் அன்னாருக்கு நடந்தது. அதே போன்று சிறு நீரக பிரச்சனையும் அன்னாருக்கு இருந்தது. டயாலிஸிஸ் செய்யப்பட்டு வந்தது. நீண்ட காலமாக சிகிச்சை தொடர்பாக அன்னார் ஆபிஜான் என்ற நகரத்தில் தங்கியிருந்தார்கள்.

கடந்த நாட்களில் திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டதால் இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அங்கு ஜூன் மாதம் 14 ஆம் தேதி வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ-

சித்தீக் சாஹிப் 1950 ஆம் ஆண்டு லோசங்கே என்ற ஐவெரிகோஸ்ட்டின் ஒரு கிராமத்தில் பிறந்தார்கள். சுமார் 1977 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு ஜமாஅத்தில் இணைந்தார்கள். அவர் தனது மனைவி மட்டுமின்றி ஏழு மகள்களையும், இரண்டு மகன்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். 1981 ஆம் ஆண்டு வாழ்க்கையை அர்ப்பணித்த பிறகு கல்வி பெறுவதற்காக தனது இரண்டு நண்பர்களுடன் பாகிஸ்தனிற்கு நடை பயணமாக பயணம் செய்ய தொடங்கினார். சுமார் ஒரு வருடங்கள் வரை பயணக் கஷ்டங்களை சகித்துக் கொண்ட பிறகு 1982 ஆம் ஆண்டு ரப்வா வந்தடைந்தார்.

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பெறத் தொடங்கினார். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்ற பிறகு 1985,86 ல் ஐவெரிகோஸ்டிற்கு திரும்பினார். பின்னர் மரணம் வரை சட்ட திட்டங்களுக்கேற்ப 30 வருடத்திற்கும் அதிகமாக மேற்கு ஆப்ரிக்காவின் பல்வேறு நாடுகளில் முபல்லிக்காக பணியாற்றும் நற்பாக்கித்தைப் பெற்றார்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

கற்புள்ள பெண்களைப் பற்றி அவதூறு கூறி பின்னர் நான்கு சாட்சிகளைக் கொண்டு வராதவர்களுக்கு(த் தண்டனையாக) எண்பது கசையடி கொடுங்கள். (பின்னர்) அவர்களின் சாட்சியினை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். இவர்களே கட்டுப்படாதவர்களாவார்கள். (24:5)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்


அன்னாரின் பாகிஸ்தான் பயணத்தின் விளக்கம் இவ்வாறாகும். 1970 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கானாவிற்கு சுற்றுப் பயணம் செய்தார்கள். ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் உடனான சந்திப்பு அன்னாரின் உள்ளத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் அவர்களின் நிலை முற்றிலுமாக மாறியது. ஐவெரிகோஸ்டிற்குச் சென்று பாஸ்போர்ட் தயாரித்தார்கள்.

அதன் பின்னர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திப்பதற்காக பாகிஸ்தானிற்கு பயணம் செய்ய முயற்சி செய்யத் தொடங்கினார்கள். இதற்கிடையில் மாலி நாட்டைச் சார்ந்த ஒரு இளைஞர் உமர் மாஸ் என்பவர் இன்றைய நமது முபல்லிக் ஆவார். அன்றைய நாட்களில் அவர் நமது ஆபிஜான் பள்ளிவாசலுக்கு வந்தார். மேலும் தனது ஒரு கனவின் அடிப்படையில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நகரம் மற்றும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திப்பதற்கு மிகுந்த ஆசையை அவர் வெளிப்படுத்தினார். எவ்வாறிருப்பினும் இவ்வாறு இந்த மூன்று பேரும் பாகிஸ்தான் செல்வதற்கு முடிவெடுத்தார்கள். எனவே 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி தமது பயணத்தை தொடங்கினார்கள். ஐவெரிகோஸ்டிலிருந்து புறப்பட்டு தமது பயணத்தின் முதல் இடமாக கானாவை வந்தடைந்தார்கள்.

அங்கு வஹாப் ஆதம் சாஹிப் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் அவர்களை சந்தித்தார்கள். துஆவிற்குப் பிறகு அவர்கள் டோபோ என்ற இடத்திலிருந்து பெனினைக் கடந்தவாறு நைஜீரியா நாட்டின் நகரமான லீகஸை வந்தடைந்தார்கள். அங்கு மிஷன் ஹவுஸில் தங்கிய பிறகு கேமரூன் நாட்டை நோக்கி புறப்பட்டார்கள். நைஜீரிய நாட்டின் மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் அவர்களும் தமது துஆக்களுடன் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள். மேலும் சில பொருளாதார உதவிகளையும் செய்திருந்தார்கள்.

பின்னர் கேமரூனைக் கடந்தவாறு சார்ட் என்ற ஊரில் நுழைந்தார்கள். சார்டில் கைது செய்யப்பட்டு சில கஷ்டங்களையும் அவர்கள் சகித்துக் கொண்டார்கள். ஆயினும் எல்லா நிலையிலும் பொறுமையையும், தைரியத்தையும் மேற்கொண்டவாறு தமது பயணத்தை தொடர்ந்தார்கள்.

சார்ட் என்ற இடத்திலிருந்து தமது பயணத்தை தொடர்வது என்பது ஏறக்குறைய சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. ஆனால் இராணுவத்தில் சேரும்படி அல்லாஹ் ஒரு கனவின் மூலமாக அவர்களுக்கு வழிகாட்டினான். எனவே லிபியா நாட்டின் இராணுவத்தில் சேர அன்னார் முயற்சி செய்தார்கள். அப்போது அந்த சந்தர்ப்பத்தில் அல்லாஹ் மறைமுகமான உதவியின் மூலமாக சாத்தியமற்ற ஒன்றை அவர்களுக்கு சாத்திமுள்ளதாக ஆக்கினான். ஒரு நேரத்தில் லிபியா அரசாங்கம் அவர்கள் அனைவரையும் நாடு கடத்தியது. ஆயினும் காரணிகளுக்கெல்லாம் காரணிகளின்


**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், அவனது கருணையும் இல்லாமலிருந்திருப்பின், மேலும் அல்லாஹ் மிக்க இரக்கம் காட்டுபவனாகவும், மேலும் மேலும் கருணை காட்டுபவனாகவும் இல்லாமலிந்திருப்பின் (நீங்கள் துன்பத்தில் ஆழ்ந்திருப்பிர்கள்). (24:21)

Faizal Hameed Ilahi

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

இறைவன் அந்த சூழலையே முற்றிலும் மாற்றினான். நாடு கடத்த இருந்த அந்த கட்டளை ரத்து செய்தது மட்டுமின்றி அவர்கள் லிபியா இராணுவத்தில் இணைந்து லப்னானில் சுமார் 8 மாதம் எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் சூழலும் அவர்களுக்கு உருவானது. போர் முடிவடைந்த உடன் அவர்கள் தங்களது இன்சார்ஜிடம் பாகிஸ்தான் செல்ல வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தினர்.

அதற்கு அவர்கள், இன்னும் சிறிது காலம் எங்களுடன் தங்குங்கள். அதன் பிறகு இன்டர்நேஷனல் பாஸ்போர்ட் பெறப்பட்டு நான் உங்களை அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கின்றேன் என்று கூறினார். நீங்கள் பாகிஸ்தான் செல்வதற்கு பகரமாக அமெரிக்காவிற்கு சென்று விடுங்கள் என்றும் கூறினார். அதற்கு அந்த மக்கள் நன்றியுடன் அந்த திட்டத்தை ஒப்புக் கொள்வதற்கு மறுத்து விட்டார்கள். மேலும் நாங்கள் கல்வி பயிலும் நோக்கத்தில் பாகிஸ்தான் செல்லவே விரும்புகின்றோம் என்று கூறினர். பாகிஸ்தான் தூதரகம் விசா வழங்க மறுத்து விட்டது. ஆனால் இறைவன் அவர்களின் இன்சார்ஜின் மூலமாக கராச்சி வரை செல்வதற்கு விமான டிக்கெட் கிடைக்க ஏற்பாடு செய்து விட்டான்.

இவ்வாறு 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி பாகிஸ்தான் செல்வதற்காக இவர்கள் விமான நிலையம் வந்தடைந்தார்கள். இறை உதவியின் காட்சி மீண்டும் காணக்கிடைத்தது. இன்சார்ஜ் அவர்களைப் பற்றிய அறிமுகத்தை ஒரு போலீஸ் அதிகாரிக்கு செய்து வைத்தார். இவர்கள் இஸ்லாமிய கல்வி பயில்வதற்காக பாகிஸ்தான் செல்கின்றார்கள். இவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

இவ்வாறு அந்த போலீஸ் அதிகாரி அவர்களுக்கு எல்லையற்ற உதவி செய்தார். இரவில் விமானம் எகிப்திலிருந்து புறப்பட்டு காலையில் கராச்சி விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தது.

இப்போது இவர்கள் கராச்சி வந்தடைந்து விட்டாலும் விசா பெறுவதில் சிக்கல் இருந்தது. துஆக்களுக்குப் பிறகு மீண்டும் விமான நிலைய காவல் துறைக்கு முன்பு பாஸ்போர்ட் ஆய்வுக்காக வைக்கப்பட்டது. கேள்வி பதில் நிகழ்ந்தன. கல்வி பயில்வதற்காக நாங்கள் பாகிஸ்தான் வந்துள்ளோம் என தமது நோக்கத்தை எடுத்துக் கூறினர். எனவே போலீஸ் அதிகாரி முத்திரை பதித்து பாஸ்போட்டில் கையெழுத்திட்டார்.

பின்னர் நீங்கள் எங்கு செல்ல வேண்டும்? என்று அவர் கேட்டார். அதற்கு அவர்கள் ரப்வா செல்ல வேண்டும் என்று கூறினர். அப்படியென்றால், நீர் காதியானியா? என்று அவர் கேட்டார். அவருடைய இந்த எதிர்மறையான சிந்தனையின் காரணமாக தனது முத்திரையை ரத்து செய்வதற்கு முன்பாக மற்றொரு அதிகாரி கூறினார். காதியானி என்றால் என்ன? அவர் கல்வி பயில்வதற்கு தானே செல்கின்றார். அவரை செல்ல விடுங்கள் என்று கூறினார்.

ஆக எவ்வாறிருப்பினும் ரப்வாவை வந்தடைவதற்கும், கலீஃபத்துல் மஸீஹை சந்திப்பதற்கு அவருக்கு இவ்வளவு ஆர்வம் இருந்தது என்று அவர் கூறுகின்றார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார். இங்கு கராச்சியில் ஜமாஅத் இருக்கின்றதா? இருக்கின்றதென்றால் அது எங்கு இருக்கின்றது? உறுப்பினர்கள் யாரும் இருக்கின்றார்களா? இருந்தால் அவர்களை சென்று சந்திப்பதன் மூலம் கஷ்டங்கள் நீங்கி எளிதாகி விடுமே.

எனவே இங்கு விசாரிப்போம் என்ற எந்த எண்ணமும் அவருக்குத் தோன்றவில்லை. ஜமாஅத்தை தொடர்பு கொள்வதற்கு பகரமாக நேரடியாக ரயில்வே ஸ்டேஷன் சென்று விட்டார். அங்கிருந்து ரப்வா செல்வதற்கு இரயில் டிக்கெட் கேட்டார். அங்கு இரயில் நிலையத்தில் டிக்கெட் கொடுக்கின்ற நபர் பேராசை கொண்டவராகவும் பகைமை கொண்டவராகவும் இருந்தார். எனவே நாங்கள் அஹ்மதிகளுக்கு டிக்கெட் கொடுக்க மாட்டோம் என்று கூறினார். இரண்டு மணி நேர நீண்ட விவாதத்திற்குப் பிறகு இறுதியில் இரண்டு மடங்கு பணத்தைப் பெற்றுக் கொண்டு டிக்கெட் கொடுக்க சம்மதித்தார். அந்த டிக்கெட்டும் கூட மிகவும் தாமதமாக செல்லக்கூடிய இரயில் வண்டி டிக்கெட்டையே கொடுத்தார். அதன் காரணமாக கராச்சியிலிருந்து ரப்வா வந்தடைவதற்கு 24 மணி நேரம் ஆகி விட்டது. ரப்வா சென்றடைந்தம் அவர்கள் தாருஸ் ஸியாஃபத்திற்கு சென்றார்கள்.

எவ்வாறிருப்பினும் அங்கு என்ன நடந்திருந்தது என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. மீண்டும் மீண்டும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்களைக் கேட்டு அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. பின்னர் தொடர்பு கொண்டதும் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்துள்ளார்கள் என்பதும் அவருக்கு தெரிய வந்தது. பின்னர் அன்னாருடன் சந்திப்பு நிகழ்ந்தது.

1982 ஆம் ஆண்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். கல்வியை முழுமை செய்து ஐவெரிகோஸ்டிற்கு திரும்பினார்கள். பிறகு அங்கிருந்து பல்வேறு நாடுகளின் ஜமாஅத்திற்கு பணி நியமனம் நடந்து வந்தது. 1987 முதல் 91 வரை ஐவெரிகோஸ்டிலும், 91 முதல் 92 வரை நைஜீரியாவிலும், 92 முதல் 94 வரை பெனின் நாட்டிலும், 94 முதல் 96 டோபோ நகரத்திலும், பின்னர் 96 முதல் மரணம் வரை ஐவெரிகோஸ்டிலும் அவர்கள் பணியாற்றினார்கள்.

பின்னர் ஐவெரிகோஸ்டின் முபல்லிக் பாஸித் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: சித்தீக் ஆதம் சாஹிப் கிலாஃபத்தின் உண்மையான பேரன்பரும், ஜமாஅத்தின் கலப்பற்ற தொண்டராகவும் இருந்தார்கள். நீண்ட காலம் அன்னாருடன் பணி செய்ய எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர் துஆ செய்யக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், நல்ல கனவுகளை காண்பவராகவும் இருந்து வந்தார்கள். கனவுகளுக்கு விளக்கம் கொடுப்பதில் திறமை பெற்றிருந்தார்கள். பெரும்பாலும் தன்னை அறிந்தவர்களிடத்தில் அவர்களின் கனவுகளுக்கு பொருள்களை கூறி வந்தார்கள். தொடர்ச்சியாக தமது மாதாந்திர அறிக்கையை இங்கும், தலைமையகத்திற்கும் அனுப்பி வந்தார்கள்.

எனக்கும் கடிதம் எழுதி வந்தார்கள். துஆக்களுக்கான கடிதமும் எழுதி வந்தார்கள். கடிதங்களை உருது மொழியில் எழுதி வந்தார்கள். இது அன்னாரின் பழக்கமாக இருந்து வந்தது. மிகவும் நல்ல மனிதராகவும், நேரத்தின் அருமையை உணர்ந்தவராகவும் இருந்து வந்தார்கள். அன்னாரிடம் பொறுப்புணர்வு இருந்து வந்தது. எப்பொழுதும் காலம் தவறாமையை பேணி வந்தார்கள்.


### திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுள் (ஆன்மீகம், உலகம் இவை இரண்டிலும்) சிறப்பையும், செல்வத்தையும் பெற்றவர்கள் உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் அல்லாஹ்வின் பாதையில் தங்கள் வீடுகளைத் துறந்து சென்றவர்களுக்கும் கொடுக்காமல் இருக்க முடிவு எடுக்க வேண்டாம். அவர்கள் மன்னித்து பொறுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்கள் குறைகளை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (24:23)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 01 Aug 2019 Issue No. 31

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அவர்களிடத்தில் என்ன பணி கொடுத்தாலும் குறித்த நேரத்தில் முடித்து விட முயற்சி செய்வார்கள். நீண்ட சுற்றுப் பயணங்களைக் கண்டு ஒருபோதும் அவர்கள் அஞ்சியதில்லை. உள்ளம் கவரும் வகையில் தப்லீக் செய்து வந்தார்கள். தஜ்ஜாலிய குழப்பம் மற்றும் அதன் வெளிப்பாடு மற்றும் அதன் அடையாளங்கள் மற்றும் தற்போதைய காலத்தின் சீர்கேடுகள் ஆகியவற்றை குறிப்பிட்டு இமாம் மஹ்தியின் தோற்றத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். செவியேற்பவர் அன்னாரின் சொற்பொழிவாற்றலை பாராட்டாமல் இருக்க முடியாது.

பெரும்பாலும் தப்லீக்கில் அன்னாருக்கு வெற்றி கிடைத்து வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கு மண்டலத்தில் அவரது தப்லீக் சுற்றுப் பயணத்தின் காரணமாக அல்லாஹ் ஆயிரக்கணக்கான கனிகளை வழங்கி உள்ளான். தனது பாகிஸ்தான் பயணம் மற்றும் அல்லாஹ்வின் அருட்களை அதிகம் நினைவு கூர்ந்து வந்தார்கள்.

மேலும் அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு அடையாளமாக இந்த அடையாளத்தை அவர்கள் எடுத்துரைத்து வந்தார்கள். எவ்வாறு அல்லாஹ் தொலைதூர நாட்டிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்யக்கூடிய நபர்களை வழங்கியுள்ளான் என்பதையும் எடுத்துரைத்து வந்தார்கள்.

மர்ஹூமின் பேச்சாற்றல் அதிலும் குறிப்பாக ஜேலா மொழியில் அன்னார் பேசி வந்தார்கள். அது கேட்பவர்களின் மீது சிறப்பான ஈர்ப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது. ரேடியோ மூலமாக நேரலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார்கள். மிக உயர்தரமான நிகழ்ச்சிகளாக அவை இருந்தன. அது பலராலும் விரும்பப்பட்டது. அல்லாஹ் அன்னாருடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களின் பிள்ளைகளுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. அன்னாரின் நன்மைகளை தொடரும் நற்பாக்கியத்தையும் அவர்களுக்கு வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா மியான் குலாம் முஸ்தஃபா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மீரக் மாவட்டம் அவ்காடா ஊரைச் சார்ந்தவர். ஜூன் மாதம் **24** ஆம் தேதி **83** வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். இறைவணக்கம் செய்வதில் சிறப்பான ஆர்வம் இருந்தது. ஜமாஅத்தாக தொழக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். ஃபஜர் தொழுகைக்கான பாங்கை பள்ளிவாசலுக்கு வந்து தானே கொடுத்து வந்தார்கள். தமது குடும்பத்தினரை ஃபஜர் தொழுகைக்காக எழுப்பி வந்தார்.

ரமலானின் நோன்புகளை வைப்பதற்கு இறுதி நேரம் வரை அல்லாஹ் அவருக்கு நற்பாக்கியத்தை வழங்கி இருந்தான். தப்லீக் செய்வதற்கு எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார். தன்னை சந்திக்கக் கூடியவருக்கு ஏதாவதொரு வகையில் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து விடுவார். மிக சிரித்த முகத்துடன் அனைவரையும் சந்திப்பார். மிகவும் நல்ல மற்றும் கலப்பற்ற நபராக இருந்தார். கிலாஃபத்துடன் உணர்வுப் பூர்வமான தொடர்பை கொண்டிருந்தார். ஜுமுஆ குத்பாக்களை தொடர்ச்சியாக கேட்டு வந்தார். பிள்ளைகளுக்கும் அதனை வலியுறுத்தி வந்தார். தலைமையக விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவது மற்றும் பொருள் தியாகத்தில் எப்போதும் முன்னிலை வகித்து வந்தார். மேலும் அவருக்கு தர்பார்க்கர் என்ற இடத்தில் கிணறு தோண்டுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. அது பொது மக்களுக்கு பயனளித்து வருகிறது.

வஸிய்யத்தின் கணக்கு வழக்குகளை தான் உயிருடன் இருக்கும்போதே முழுமை செய்து விட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு தனது வீட்டையும் ஜமாஅத்திற்கு கொடுக்கும் நற்பாக்கியம் அவருக்கு கிடைத்தது. மேலும் தான் பள்ளிவாசலின் ஒரு சிறிய அறையில் தங்கிக் கொண்டார். இப்போது அந்த வீடு முரப்பி ஹவுஸாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மர்ஹூம் மூஸியாக இருந்தார். தனக்குப் பின் **5** மகள்களையும், **3** மகன்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்.

அன்னாரின் மகன் ஜமாஅத்தின் முரப்பியாக தொண்டாற்றி வருகின்றார். தமது தந்தையின் மரணத்தின்போது அவரால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. தமது தாயாரின் மரணத்தின் போதும் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. இந்த இரு துன்பங்களையும் குலாம் முர்தஸா சாஹிப் மிக பொறுமையுடனும் தைரியத்துடனும் சகித்துக் கெண்டார்கள். அல்லாஹ் அன்னாரின் பொறுமையையும் தைரியத்தையும் அதிகரிப்பானாக. மேலும் நன்றியுணர்வுடன் தனது வக்ஃபை முழுமை செய்யும் நற்பாக்கியத்தை அவருக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக.

மர்ஹூமின் ஒரு பேரன் காஸிம் முஸ்தஃபா சாஹிப் அவர்களும், மற்றொரு பேரனான முஹம்மது சஃபீருத்தீன் சாஹிப் அவர்களும் முரப்பி ஆவார்கள். இதே போன்று மற்றும் ஒரு பேரரான பிலால் அஹ்மது வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருக்கின்றார். இந்த ஆண்டு மருத்துவராகி தொண்டாற்ற இருக்கின்றார். அல்லாஹ் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

குலாம் முர்தஸா சாஹிப் முரப்பி ஆவார்கள். அன்னார் தற்போது வெளிநாட்டில் உள்ளார்கள். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் மிக மும்முரமாக செயல்பட்டு வருகின்றார்கள். நான் கூறியது போன்று இதன் காரணமாக அவரால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவருக்கு பொறுமையுடனும், தைரியத்துடனும் துன்பத்தை சகித்துக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஜுமுஆவிற்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad